# அக்டோபர் 21

## இறுதி மணித்துளியின் தேவன்

அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார். அதிலிருந்து தண்ணீர் ஓடி வந்தது. அவன் குடித்தபின்பு அவன் உயிர் திரும்ப வந்தது . . . நியா.15:19

*படிக்க:* நியாயாதிபதிகள் 15:12–19

*தேவனுடைய வல்லமையை மட்டுப்படுத்துவது நாம் செய்யத்தகாத ஒரு காரியம். ஒரு தேவையை சந்திக்கும் போது, அவருக்கு அதை தெரியப்படுத்துவது மட்டுமேயன்றி, எப்பொழுது கொடுக்கவேண்டும். எப்படி கொடுக்க வேண்டும்? என்று அறிவுரை வழங்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர் சரியான வழியையும் சரியான முறையையும் அறிந்திருக்கிறார்.*

*சிம்சோன் ஒரு கழுதையின் தாடை எலும்பைக் கொண்டு ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்றான், ஆனால் அவன் அந்த யுத்தகளத்தில் குடிக்க ஒரு கலசம் தண்ணீர் இல்லாததால் தன் உயிருக்காகப் போராடினான். அவன் ஜெபித்தபோது, தாகத்தால் மரிக்குமுன், தேவன் அவனுக்கு ஒரு நீரூற்றை உண்டாக்கினார். அதைக் குடித்தபோது, அவன் ஜீவன் அவனிடம் திரும்பி வந்தது. பலமுறை நாம் தேவனை நம் சூழ்நிலையையும், நேரத்தையும் வைத்து நிதானிக்கிறோம். நம் கடிகாரம் தேவனின் கடிகாரத்தைவிட வேகமாகவே எப்பொழுதும் ஓடுகிறது. நேரத்தை நாம் ஒரு பொருட்டாக எண்ணவேண்டாம். நம் காலங்கள் அவர் கரங்களில் இருக்கிறதல்லவோ! (சங்.31:15) அது தேவனின் கட்டுப்பாட்டுற்கு வெளியே சென்றுவிடவேமுடியாதது. பரிசுத்தவான்கள் எப்படி தங்கள் சவால்களை நிதானமாக சந்தித்து, மேற்கொண்டார்கள் என்பதைத் வேதம் தெளிவாகச் சொல்லுகிறது. விசுவாசியின் அடிப்படை குணாதிசயம், பதறாமல் இருப்பதே. (ஏசா. 28:16) உங்கள் சூழ்நிலையில் நிதானமாகவும் பொறுமையாகவும் இருந்து, கர்த்தர் கிரியை செய்ய அனுமதியுங்கள். கவலைப்படுதல் தேவனுடைய இடத்தை எடுத்துகொள்ளும். அது உங்களுக்கு உதவப்போவதில்லை. கடைசி நொடிப்பொழுதிலும் அவரால் காரியங்களை சரிசெய்ய முடியும். தேவன் எத்தனைமுறை தாவீதின் வாஞ்சையை சவுலின் கொலைப்பாதக கரங்களிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். கீழே விழுந்து கொண்டிருக்கிற குஞ்சுகள் தரையைத் தொடுமுன் தன் சிறகுகளை விரிக்கிற கழுகைப்போல தேவன் இருக்கிறார். அவர் ஒருமுறை கூட தவறவிடுவதில்லை.*